**பட்டதாரிகளிற்கு வேலை வாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களையும் பட்டதாரிப் பயிலுநர்களாகப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களையும் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவைக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - *2022***

நிரல் கல்வி அமைச்சின் ED/02/29/21/A1/01/2020 இலக்க *2021.12.31*ஆம் திகதிய கடிதத்திற்கு அமையவும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் வழங்கப்பட்ட அனுமதிக்கமையவும், வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவைக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குறிப்பிடப்படும் தகமைகளையுடைய, இவ்வறிவித்தலின் பந்தி 4.6 இன் கீழான வகுதிக்குள் உள்ளடங்கும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த மற்றும் மத்திய அரச சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக **வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் மாத்திரமே** ஏனைய விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். நாடளாவிய ரீதியிலான விண்ணப்பதாரர்களுக்கு இவ்வறிவித்தலின் பந்தி 4.2 (அ) பொருத்தமற்றதாகும்.

## *02.* ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சேவை நிபந்தனைகள்

*2.1* நிரல் கல்வி அமைச்சின் ED/02/29/21/A1/01/2020 இலக்க *2021.12.31*ம் திகதிய சுற்றிக்கைக்கு அமையவும், **1885/38**ஆம் இலக்க **2014.10.23**ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டும், தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவிக்குத் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

*2.2* தற்காலிக நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்குள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பின் *7.2.4.1* இற்கமைய நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்.

*2.3* மேற்படி பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகளுக்கு ஒரு வருடத்திற்குள் மீளப் பரீட்சையை நடத்துதல் அல்லது அவர்களை மீளவும் முன்னர் வகித்த பதவிக்கு நியமித்தல் அல்லது பட்டதாரிப் பயிலுநர்களை அபிவிருத்தி அலுவலர்களாக மாற்றுதல் அல்லது பரீட்சையில் சித்தியடையாத டிப்ளோமாதாரிகளது சேவை முடிவுறுத்தல் என்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*2.4* இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

*2.5* நியமனப் பாடசாலை தொடர்பில் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் விண்ணப்பதாரர் கட்டுப்படுதல் வேண்டும். அது குறித்து விண்ணப்பதாரர் எவ்வித மேன்முறையீட்டையும் சமர்ப்பிக்க முடியாது.

*2.6* இணைப்பு *1* இல் குறிப்பிட்டவாறு வலய ரீதியான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இவ்வாறு நியமனத்தினைப் பெறுவோர் குறித்த பாடசாலையில் தொடர்ச்சியாக *10* வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

*2.7* நிரப்பப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

*2.8* விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கப்படும் பாடத்தினை, பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

## 03. சம்பள அளவுத்திட்டம்

நிரல் கல்வி அமைச்சின் ED/02/29/21/A1/01/2020 இலக்க 2021.12.31ஆம் திகதிய கடிதத்தின், நியமனம் வழங்கும் ஒழுங்குமுறைகள் என்ற பகுதியின் பிரிவு 9 இன் பிரகாரம் எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்து நிரந்தர நியமனம் வழங்கப்படும் பொழுது, இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பின் பிரிவு 5 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

எனினும், தற்காலிக நியமனக்காலப்பகுதிக்கு நிரல் கல்வி அமைச்சினால் குறித்துரைக்கப்படும் அறிவுறுத்தலுக்கமையவே சம்பளம் வழங்கப்படும்.

## 04. பொதுத் தகமைகள்

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 (அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். **(*நேர்முகத்தேர்வின் போது வாக்காளர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

**அல்லது**

(ஆ) நாடளாவிய ரீதியில் பிரிவு 4.6 இன் கீழாக தகமை பெறும் விண்ணப்பதாரிகள்

04.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.4 2019.12.31ஆம் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் **சகல தகமைகளையும்** விண்ணப்பதாரி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04.6 மேற்குறிப்பிட்ட தகமைகளுடன் விண்ணப்பதாரி பின்வரும் வகையிலான நியமனத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானதாகும்.

i. பட்டதாரிகளைத் தொழிலில் ஈடுபடுத்தும் செயற்றிட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிப்பயிலுநர்களாக இருத்தல்

**அல்லது**

ii. 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற " பட்டதாரிப் பயிலுநர்களுக்கு அரச நிறுவனங்களில் பயிற்சி வழங்குதல்" திட்டத்தின் கீழ் பட்டதாரிப் பயிலுநராக பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 01.01.2020 மற்றும் 01.01.2021 ம் திகதியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தராக நிரந்தர நியமனம் பெற்றவராக இருத்தல்

**அல்லது**

iii. பட்டதாரிகளைத் தொழிலில் ஈடுபடுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2020, 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட டிப்ளோமாதாரியாக இருத்தல்

**குறிப்பு : - ஒவ்வொரு பாடத்திற்கும் போதியளவு பட்டதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் மட்டும் குறித்த ஆளணி வெற்றிடத்திற்கு டிப்ளோமாதாரி ஒருவரின் விண்ணப்பம் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.**

## 05. கல்வித் தகமைகள்

05.1 பட்டதாரிகள் **1885/38**ம் இலக்க **2014.10.23**ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரிவு 13.7 இற்கமைய கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சினால் ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத் தகமைச் சான்றிதழைப் (**இணைப்பு – 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு**) பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

05.2 இணைப்பு 2 இல் காட்டப்பட்ட பாடங்களில் ஒன்றினைப் பிரதான பாடங்களில் ஒன்றாக கொண்ட நான்கு வருடகால கற்கைக் காலத்தினைப் பூர்த்தி செய்த உயர்தேசிய டிப்ளோமாதாரியாக இருத்தல் வேண்டும்.

05.3 05.1 **அல்லது** 05.2 இல் குறிப்பிடப்பட்ட தகமைகளுடன் மேலதிகமாக க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை

06.1 இவ்வறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடங்களுக்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்களுக்காக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சாதாரண நேர்முகத்தேர்வு நடத்தப்படும். இச் சாதாரண நேர்முகத்தேர்விற்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. இச் சாதாரண நேர்முகத்தேர்வின் போது இவ் ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் பிரயோகப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பிரயோகப்பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின் அடிப்படையில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

06.2 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது உடல்/உள தகைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## 07. விண்ணப்பிக்கும் முறை

07.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 07 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 8 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், 15 முதல் 17 வரையான பந்திகள் மூன்றாம் பக்கத்திலும், 18 முதல் 19 வரையான பந்திகள் இறுதிப்பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை **2022.05.18**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,"**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான கல்வித்தகைமைகளை இணைப்பு 2 இல் பார்வையிட்டு, தங்களின் பட்டத்திற்கு உரித்தான பாடங்களுக்கான விருப்பத்தெரிவுகளினை விண்ணப்பத்தின் (a) பிரிவில் குறிப்பிட்டு **ஒரு விண்ணப்பப் படிவத்தினை மாத்திரமே** சமர்ப்பிக்க வேண்டும்.

07.3 விண்ணப்பதாரிகள் தம்மால் குறிப்பிடப்பட்டு விண்ணப்பிக்கும் பாடங்களுக்காக வெற்றிடம் நிலவும் 3 வலயங்களை முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பத்தின் (b) பிரிவில் குறிப்பிடுதல் வேண்டும். ஆயினும் விண்ணப்பிக்கப்பட்ட வலயங்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது.

07.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது விண்ணப்பதாரியின் பெயரை முதலில் எழுதி பெயரின் அனைத்து முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் குறிப்பிடவேண்டும்.

**உதாரணம்**:- விண்ணப்பப்படிவத்தின் *01* இல் ஆங்கிலத்தில் KUMAR.K.S எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

07.5 அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **NP/07/10/01/168** என்பதைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

07.6 விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் **நிழற்படப்பிரதியை** தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் விண்ணப்பதாரர் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார். ஆயினும், நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவதால் மட்டும் நியமனம் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது.

07.7 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில், தகுதியானவர்கள் என இனங்காணப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு தொடர்பாக பொது அறிவித்தல்கள், வடக்கு மாகாண சபை இணைத்தளத்தில் (www.np.gov.lk) வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். இந்நேர்முகத்தேர்விற்கான கடிதங்கள் விண்ணப்பதாரிகளுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும். நேர்முகத்தேர்வுத் திகதிக்கு குறைந்தது *03* நாட்களுக்கு முன்னராவது நேர்முகத்தேர்விற்கான அழைப்புக் கடிதம் கிடைக்காவிடின், நேர்முகத்தேர்விற்கான அழைப்புக் கடிதம் கிடைக்காமை பற்றி கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் **"செயலாளர், கல்வி அமைச்சு , வடக்கு மாகாணம், செம்மணி வீதி நல்லூர், யாழ்ப்பாணம் "** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல –*021 2231343 / 0212220039* ,தொலைநகல் இல -*021 2220794*)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**
கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி, நேர்முகத்தேர்விற்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

07.8 **ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** விண்ணப்பதாரி தமது திணைக்களத்தலைவர் அல்லது அத்திணைக்களத்தினைச் சேர்ந்த பொருத்தமான பதவிநிலை அலுவலர் ஒருவர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

07.9 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ***18.05.2022*** ஆகும்.

## 08. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்

பரீட்சார்த்திகள் நேர்முகத்தேர்வின் போது நேர்முகத்தேர்வுச் சபை திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் , கல்வி அமைச்சு வடக்கு மாகாணம் "** அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். நேர்முகத்தேர்வு நடாத்துதல் தொடர்பாக **வடக்கு மாகாண கல்வி அமைச்சு** செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 9 .பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இவ் நேர்முகத்தேர்வு விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் நேர்முகத்தேர்விற்கு முன்னரோ நேர்முகத்தேர்வின்போதோ அல்லது நேர்முகத்தேர்வின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது தகவுடைமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென நியமனத்தின் பின் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் வடக்கு மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 10. பரீட்சைத் திட்டம்

### 10.1 நேர்முகத்தேர்வு

நேர்முகத்தேர்விற்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளிற்கு பிறிதொரு தினத்தில் நேர்முகத்தேர்விற்குச் சமூகமளிக்க இடமளிக்கப்படமாட்டாது.

தனது தகமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகத்தேர்வுக்குழுவிடம் நேர்முகத்தேர்விற்குச் சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகத்தேர்வின்போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

### 10.2 பிரயோகப் பரீட்சை

நேர்முகத்தேர்வில் தகமைபெறும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01. நோக்கம் மற்றும் அணுகுமுறை / பிரவேசம் **(Objective and Approach)** | 05 | 02 |
| 02. ஆளுமை மற்றும் குரல்கட்டுப்பாடு ( நிர்வாகம் ) **(Personality and Voice Control)** | 05 | 02 |
| 03. தொடர்பாடல் முறைகளின் தெளிவு **(Clarity in the Communication)** | 05 | 02 |
| 04. நேர முகாமைத்துவம் **(Time Management)** | 05 | 02 |
| 05. விளக்கக்காட்சி / முன்வைப்பு நுட்பங்களின் பயன்பாடு **(Usage of Techniques of Presentation)** | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

**11.** இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலும் நேர்முகத்தேர்வு நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி**

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
04.04.2022

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்